**கவனிக்க.**- *31.5.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (III) *மற்றும் பகுதி* IV (*அ*) *பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1814 - 2013 ජූනි මස 07 වැනි සිකුරාදා - 2013.06.07

*1814 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## *பகுதி* I : *தொகுதி* (II*அ*) - *விளம்பரங்கள்*

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 732 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 742 |


**கவனிக்க.**- (i) *மைத்திரிபால சிறிசேன லக்தரு திரிய மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்) சட்டமூலம் 2013, ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2013, யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, யூன் மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு தமிழ் மொழி மூல பதிவாளர் பதவி - அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, யூலை மாதம் 08 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, மே 13.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அம்பாறை | அட்டாளைச்சேனை | கோணாவத்த பிரிவில் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், அம்பாறை |

6-01

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - காலி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, யூலை மாதம் 08 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, மே 13.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | தவலம | பன்னங்கல பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் ஹினிடும் பத்துவ பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், காலி |

6-02

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி – அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, யூலை மாதம் 08 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, மே 13.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அம்பாறை | அக்கரைப்பற்று | ஜும்மா பள்ளிவாசல் பகுதிப் பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், அம்பாறை |

6-03

---

**இலங்கை நிரந்தர வான்படை**

ஆண்/பெண் வான்படை வீரர்களுக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர வான்படையில் ஆண்/பெண் வீரர்களுக்கான வெற்றிடங்கள் கீழ்க்காணும் பிரிவுகளில் உள்ளன :

1. (அ) கல்வித் தகைமைகளும் பிரிவுகளும் :

(1) ***வானூர்தி பொறியியல் (ஆண்) :***

(அ) வான் அமைப்பு எந்திரவியலாளர் (ஆண்)
(ஆ) வான் மின்னியலும் உபகரண எந்திரவியலாளரும் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி சித்தியும் ஆங்கில மொழி உட்பட கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்தியும் இதில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச் சித்தி உட்பட இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) சித்திபெற்றிருத்தல் வேண்டும். கணிதம், விஞ்ஞானம் பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

(2) ***பொது பொறியியல் :***

(அ) வானூர்தி ஒட்டுவேலை எந்திரவியலாளர் (ஆண்)
(ஆ) சேபேஸ்டெக் எந்திரவியலாளர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி சித்தியும் ஆங்கில மொழி உட்பட கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்தியும் இதில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச் சித்தி உட்பட இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) சித்திபெற்றிருத்தல் வேண்டும். கணிதம், விஞ்ஞானம் பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

(இ) வாகன இயந்திர இயக்குனர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி சாதாரண சித்தி உட்பட இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) பரீட்சைக்குத் தோற்றியிருப்பதோடு பாவனையில் உள்ள வாகன அனுமதிப்பத்திரம் வைத்திருப்பது கட்டாய தகைமையாகக் கருதப்படும்.

(3) ***மின்னியலும் தொலைத்தொடர்பும்/பொறியியலும் :***

(அ) வான் வானொலி மின்னியல் இயந்திர பொறியியலாளர் (ஆண்)
(ஆ) மின்னியல் தொலைத்தொடர்பு இயந்திர பொறியியலாளர் (ஆண்)
(இ) தொலைபேசி இயக்குனர் (ஆண்)
(ஈ) கணனி பொறியியலாளர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி அத்துடன் ஆங்கிலத்தில் சாதாரண சித்தியும் உட்பட ஆறு பாடங்களில் (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(4) ***வைத்தியம் :***

*(அ) தாதி உதவியாளர் (ஆண்/பெண்)*

*(ஆ) பல் தொழில்நுட்பவியலாளர் (ஆண்/பெண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் வேறு ஒரு பாடத்தில் திறமைச் சித்தியும், ஆங்கிலத்தில் சாதாரண சித்தியும் இதில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச் சித்தி உட்பட இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங் களில் (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) சித்திபெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம்/ இணைந்த கணிதம், இரசாயன விஞ்ஞானம்/ பௌதிக விஞ்ஞானம்/ விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்க ளில் பிரதான பாடம் மூன்று ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் சுகாதார அமைச்சினால் நடத்தப்படும் உயர் பயிற்சிநெறிக்கான தகைமையாகக் கருதப்படும்.*

(5) ***வழங்குனர் :***

*(அ) வழங்குனர் (ஆண்/பெண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழியில் சாதாரண சித்தியும் கணிதம், விஞ்ஞானம் வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒரு திறமைச் சித்தி உட்பட இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) சித்திபெற்றிருத்தல் வேண்டும்.*

(6) ***முகாமைத்துவம் :***

*(அ) முகாமைத்துவ உதவியாளர் (ஆண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் சாதாரண சித்தியும் கணிதம்/ விஞ்ஞானம்/ வர்த்தகமும் கணக்கியலும் ஆகிய பாடங்களில் ஒன்றில் ஒரு திறமைச் சித்தி உட்பட இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) சித்திபெற்றிருத்தல் வேண்டும். கணனி பற்றிய அறிவு மேலதிக தகைமையாகக் கருதப்படும்.*

*(ஆ) கணக்கியல் உதவியாளர் (பெண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் சாதாரண சித்தியும் கணிதம்/ வர்த்தகமும் கணக்கியலும் ஆகிய பாடங்களில் ஒன்றில் ஒரு திறமைச் சித்தி உட்பட இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) சித்திபெற்றிருத்தல் வேண்டும். கணனி பற்றிய அறிவு மேலதிக தகைமையாகக் கருதப்படும்.*

(7) ***தொழிற்பாடுகள் :***

*(அ) வான் தொழிற்பாடுகள் (ஆண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழியில் சாதாரண சித்தியும் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) சித்திபெற்றிருத்தல் வேண்டும்.*

*(ஆ) தீயணைப்பாளர் (ஆண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் சாதாரண சித்தி உட்பட இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங் களில் (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) சித்திபெற்றிருத்தல் வேண்டும்.*

*(இ) துப்பாக்கியாளர் (ஆண்/பெண்)*

*(ஈ) நாய் மேற்பார்வையாளர் (ஆண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழியில் சாதாரண சித்தி உட்பட இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங் களில் (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) சித்திபெற்றிருத்தல் வேண்டும்.*

(8) ***பொலிஸ் :***

*(அ) பொலிஸ் (ஆண்/பெண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் சாதாரண சித்தி உட்பட இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) சித்திபெற்றிருத்தல் வேண்டும்.*

(9) ***சங்கீத வாத்தியம் :***

*(அ) சங்கீத வாத்திய இயக்குனர்*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் சாதாரண சித்தி உட்பட இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) சித்திபெற்றிருத்தல் வேண்டும். சங்கீதம் மற்றும் வாத்தியம் என்பனவற்றில் உள்ள திறமை மேலதிக தகைமையாகக் கருதப்படும்.*

*(ஆ) ஏனைய தகைமைகள்.-* மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக இலங்கை நிரந்தர வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொதுத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

*(1) தேசிய இனம்.-* ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) வயது.- 2013.07.31 ஆந் திகதியன்று-
ஆண் : 18-23 வயது வரை
பெண் : 18-22 வயது வரை

(3) உயரம்.- ஆண் - 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும் ; பெண் - 5 அடி 4 அங்குலமும் அதற்கு மேலும்.

(4) உடல் நிறை.- ஆண் : 17< உடற்பருமன் சுட்டி <26 ; பெண் : 17< உடற்பருமன் சுட்டி <25

$$\text{உடற்பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம்}^2\text{(மீ)}}$$

(5) பார்வை வர்ணப்பதிவு மட்டம்.- (CP2)

(6) தொலைபார்வை.- இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)

(7) குடியியல் நிலை.- விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். (வான்படையில் இணைந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தி யடைவதுடன் தொழிற்பயிற்சியைப் பூர்த்திசெய்து ஓராண்டு கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய வான்படை வீரர்களுக்கு அனுமதி வழங்கப்படும்).

2. பந்தி 1, 2 இல் உள்ள தேவைப்பாடுகளை அல்லது கல்வித் திறமைகளை நிறைவுசெய்யாதவர்களுமான விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்படுவர். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்த வுடன் உயரம், கண் பார்வை பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உடற்தகைமை மட்டத்தைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

3. விளையாட்டுத்துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் கவனத்திற்கொள்ளப்படும்.

**4. சேவை நிபந்தனைகள் :**

(அ) வான்படை வீரர்கள் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து வான்படை சட்டத்திற்கும் ஏனைய வான்படை ஒழுங்குவிதிகளுக்கும் வேறு கட்டளைகளுக்கும் உட்பட்டவர் களாவர்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் தொழில் துறைக்குரிய வான்படை வீரர்கள் அடிப்படைப் பயிற்சியும் அதன்பின் தொழில்துறைப் பயிற்சியும் வழங்கப்பட்டு, அவர்கள் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும், மிகக் கஷ்டமான நிலைமையிலும் இரவு பகலாக தமது தாய்நாட்டுக்குள் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்ற ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

5. **தொழிலில் அமர்த்தப்படுதல் பற்றிய நிபந்தனைகள்**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிரந்தர வான்படையில் மூன்றாம் தர வான்படை வீரர்கள்/வீராங்கனைகளாக சேர்க்கப்பட்டு 12 வருடங்கள் சேவையாற்ற வேண்டும். இதில் 8 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்ற வேண்டும். இது முடிந்த பிறகு 4 வருடங்கள் மீண்டும் நிரந்தர உப சேவையில் இணையுமாறு அழைப்பு விடுக்கும் சந்தர்ப்பத்தில் வர வேண்டும். 8 வருடங்கள் முடிந்த பிறகு வான்படை தளபதியின் அனுமதியுடன் திரும்பவும் வேலை செய்ய தகுதியானவர் களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

6. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கை அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கைக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

**7. சம்பளமும் கொடுப்பனவுகளும் :**

(அ) ஒரு வருடத்திற்கு வான்படை வீரர்களுக்கு ஏற்புடையதாக திரட்டப்பட்டுள்ள சம்பள விகிதங்கள் பின்வருமாறு :-

| | | |
|---|---|---|
| விமான வீரன் - | : | ரூபா 1,73,100-6 x 1,740-19 x 2,040 = ரூபா 2,22,300 வருடத்திற்கு |
| முன்னணி விமான வீரன் | : | ரூபா 1,78,320-4 x 1,740-19 x 2,040 = ரூபா 2,22,300 வருடத்திற்கு |
| கோப்ரல் | : | ரூபா 1,83,540-10 x 2,040 - 9 x 2,880 = ரூபா 2,29,860 வருடத்திற்கு |
| சார்ஜன்ட் | : | ரூபா 1,87,620-3 x 2,040 - 9 x 2,880 - 3 x 3,840 = ரூபா 2,31,180 வருடத்திற்கு |
| பிளைட் சார்ஜன்ட் | : | ரூபா 1,91,700-1 x 2,040 - 9 x 2,880 - 3 x 3,840 = ரூபா 2,31,180 வருடத்திற்கு |
| அதிகாரம்பெற்ற அலுவலர் | : | ரூபா 1,99,500 - 7 x 2,880 - 14 x 3,840 = ரூபா 2,73,420 வருடத்திற்கு |
| பிரதம அதிகாரம்பெற்ற அலுவலர் | : | ரூபா 2,23,500 - 13 x 3,840 = ரூபா 2,73,420 வருடத்திற்கு |

மேற்குறிப்பிட்ட சம்பளத் திரட்டு விகிதங்களுக்கு ஏற்புடையதாக சம்பள கொடுப்பனவுகள் வழங்கப்படும். சேவைக்காலத்தில் அவரவர் நன்னடத்தை, சேவை ஆற்றல் ஆகியவற்றிற்கிணங்க உயர் நிலைகள் கிடைக்கப்பெறுவதுடன் அதற்கிணங்க வான்படை வீரர்/வான்படை வீராங்கனைகளுக்கு சம்பள விகிதங்களும் திருத்தப்படும்.

(ஆ) ***வேறு கொடுப்பனவுகள் :***

(1) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூபா 6,600 ;

(2) கடினப்படி மாதமொன்றுக்கு ரூபா 600 ;

(3) கஷ்டப் பிரதேசங்களில் சேவை புரிபவர்களுக்கு மேலதிகமாக மாதமொன்றுக்கு ரூபா 3,900 வழங்கப்படும் ;

(4) விசேட கடினப் படி.- விசேட கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 2,400 வழங்கப்படும் (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 80 வீதம்) ;

(5) விசேட கொடுப்பனவு.- அடிப்படைச் சம்பளத்தில் 15% மற்றும் ரூபா 375 ;

(6) *உற்சாகமூட்டுக் கொடுப்பனவு.-* சேவைக்காலம் 5 வருடம் பூர்த்தியடைந்தபின் இக்கொடுப்பனவு வழங்கப்படும் (மாதமொன்றுக்கு ரூபா 250 இலிருந்து 850 வரை) ;

(7) *உணவு கொடுப்பனவு.-* வெளியில் தங்கும் வான்படை வீரர்/ வான்படை வீராங்கனைகளுக்கு மாதமொன்றுக்கு ரூபா 12,758.40 (படை முகாமினுள் தங்கும் வான்படை வீரர்களிற்கு இலவச உணவு வசதி) ;

(8) சீருடைக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 170 வழங்கப்படும் ;

(9) மேலதிகக் கொடுப்பனவு ரூபா 1,000 வழங்கப்படும் ;

(10) *தங்குமிட வசதி.-* படை முகாமினுள் தங்கியிருக்கும் வான்படை வீரர்களுக்கு இவ்வசதி இலவசமாக வழங்கப்படும் ;

(11) *பிரயாணம்.-* ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரத பயணச்சீட்டுகள் (வீரர்/வீராங்கனைக்கும் கணவருக்கும் பிள்ளைகளுக்கும்). உள்ளே தங்கியிருக்கும் வான்படை வீரர்களுக்கு மாதமொரு தடவை சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு ;

(12) *கலவரகாலப்படி.-* நிரந்தரமான நிலையங்களுக்கு வெளியே கடமைக்குச் செல்லும்போது இக்கொடுப்பனவு வழங்கப்படும் (விவாகமானவர், விவாகமாகாதவர் என்பதற்கிணங்க கொடுப்பனவு வேறுபடும்) ;

(13) *தகைமைச் சம்பளம்.-* விசேட பயிற்சிநெறியில் தகைமை பெற்றவர்களுக்கு அல்லது வான்படைச் சேவைக்கு விசேட பெறுமதிவாய்ந்த தகைமை கொண்டிருப்பவர்களுக்கு இத்தகைமைச் சம்பளம் வழங்கப்படும். மாதமொன்றுக்கு ஆகக்கூடிய தொகை ரூபா 637.50 வழங்கப்படும் ;

(14) *நன்னடத்தைப் பதக்கம் சம்பளம்.-* மிக உயர்ந்த தரத்திலான நடத்தையும் பொது ஒழுக்கமும் கொண்ட ஆளணியினருக்கு மாதமொன்றுக்கு ரூபா 30 இலிருந்து ரூபா 204 வரை வழங்கப்படும் ;

(15) *மீள அமர்த்தலுக்கான சம்பளம்.-* மீள அமர்த்தப்பட்ட காலப்பகுதியின்போது மாதமொன்றுக்கு ஆளணியினர் ரூபா 300 க்கு உரித்துடையவராவர் ;

(16) *மருத்துவம்.-* வான்படையின் செலவில் வான்படை வீரர்களுக்கும் திருமணமாயின் அவர்களது குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

(17) வெளியில் தங்கியிருப்பவர்களும் வேலைத்தலத்திலிருந்து 30 மைல் (கி. மீ. 48) சுற்றுவட்டத்தில் வாழ்பவர்களுமான வான்படை வீரர்களுக்கு/வீராங்கனைகளுக்கு இ. போ. ச. பேரூந்து வண்டிகளில் வேலைக்கென இலவசமாக பிரயாணச் சீட்டு வழங்கப்படும்.

(18) விவாகமான வான்படை வீரர்களுக்கு அரசாங்கத்திற்குரிய விவாகமானவர்களுக்கான விடுதியில் குடியிராவிடில் மாதமொன்றுக்கு ரூபா 1,200 இருந்து 3,300 வரை வாடகைப்படியொன்றுக்கு உரித்துடையவராவர்.

(19) *விரிவுரையாளர் கொடுப்பனவு.-* மாதமொன்றுக்கு ரூபா 425 இலிருந்து ரூபா 510 வரை கொடுப்பனவுக்கு உரித்துடையவராவர்.

(20) வேறு கொடுப்பனவுகள் (பிரிந்திருத்தல் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்றுதல்) இலங்கை வான்படை சம்பள சட்டதிட்டங்களுக்கு அமைய இக்கொடுப்பனவு வழங்கப்படும்.

(21) ஓய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவு என்பன காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச்சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படும். வான்படை வீரர்கள் அனைவரும் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப் படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவு தொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

8. ***விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்.-*** (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும்.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பக்காரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் /சபையின்/குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பக்காரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பக்காரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்போது பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப்பிரதி (கல்விச் சட்டக் கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் அல்லது பிறப்புச் சான்றிதழின் பிரித்தெடுப்பு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா) ;

(2) தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைக்கு ஆதாரமான சான்றிதழ் ;

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்ற தொழில்துறை/தொழில்நுட்பப் பயிற்சி அத்துடன்/அல்லது அனுபவம் ஏதுமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ் ;

(4) இரண்டு நற்குணச் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும். இவற்றுள் ஒன்று இறுதியாக கல்வி பயின்ற பாடசாலை அதிபரினதும் மற்றையது விண்ணப்பக்காரரை தனிப்பட்ட முறையில் நன்கறிந்த பொறுப்பு வாய்ந்த ஒருவரிடம் இருந்து அல்லது விண்ணப்பக்காரரின் தொழில் தருநரிடமிருந்து (தொழில் புரிவாராயின்) ;

(5) விளையாட்டுத்துறை நடவடிக்கைகள் கெடெற்றிங் முதலிய வற்றிற்கு ஆதாரமான சான்றிதழ்கள்.

9. **நேர்முகப் பரீட்சை** (ஆண்).- 2013, யூன் மாதம் 12, 14 மற்றும் 15 ஆந் திகதிகளிலும்

(பெண்).- 2013, யூன் மாதம் 17 மற்றும் 18 ஆந் திகதிகளிலும்

இலங்கை வான்படை, ஏக்கல நிலையத்தில் 9.00 மணி முதல் 13.00 மணிவரை நடைபெறும்.

10. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு தங்களின் செலவில் முகம் கொடுக்க வேண்டும்.

11. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய அடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டை வைத்திராத விண்ணபக்காரர்கள் வேறு ஏதேனும் விதமான ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளமொன்றை சமர்ப்பிக்கலாம். ஆயினும் எந்தவொரு விண்ணப்பக்காரரும் தேசிய அடையாள அட்டையின்றி சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்.

12. தங்கள் இறுதி நேர்முகப் பரீட்சைகளையடுத்து பொருத்தமானவர் களாக இருக்கக்கூடிய விண்ணப்பக்காரர்கள் வான்படை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப்படுத்தப்படுவர். பொருத்தமான விண்ணப்பக்காரர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு வான்படையின் தொழிற் தேவைப்பாடுகளின் அடிப்படையில் உயர் புள்ளி மட்டத்தில் இருந்தே தேர்வுசெய்யப்படுவர்.

13. விண்ணப்பதாரரொருவருக்கு உதவி வழங்க விரும்பும் எவரும் நற்சான்றிதழ் வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பதார ரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தணித்தல் அத்தகைய விண்ணப்பக்காரரை தகைமையிழக்கச் செய்யும்.

14. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்திற்கும் விண்ணப்பக்காரரை ஆளாக்கிவிடும்.

15. நேர்முகப் பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பக்காரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

எச். டி. அபேவிக்ரம,
எயார் மார்ஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு 2.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வான்படை**

வான்படை வீரர்களுக்கான ............................................. பதவி

1. முழுப் பெயர் :----.

(தேசிய ஆளடையாள அட்டைப்படி)

2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

3. விண்ணப்பிக்கும் தொழில் துறை :----.

4. அஞ்சல் முகவரி :----.

5. நிரந்தர முகவரி :----.

6. நிரந்தர முகவரியின் பொலிசு நிலையம் :----.

7. மாவட்டம் :----.

8. தேர்தற் தொகுதி :----.

9. கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.

10. தொலைபேசி இலக்கம் :----.

11. பிறந்த திகதி :----.

12. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.

13. பால் (ஆண்/பெண்) :----.

14. உயரம் : அடி ---- அங்குலம் ----.

15. க. பொ. த. (சா. த.) பரீட்சை :----.

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

16. க. பொ. த. (உ. த.) பரீட்சை :----.

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

17. பதவிக்குரிய எவையேனும் விசேட தகைமைகள் :----. (தொழில்நுட்பம், தொழிற்பயிற்சி அனுபவம் முதலியன)

18. விளையாட்டுத் துறையில் விசேட சாதனைகள் பற்றிய விபரம் : ----.

19. பாடசாலையில் அல்லது வெளி ஒழுங்கமைப்புகளில் குறிப்பிடத்தக்க வேறு சாதனைகள் :----.

20. ஆயுதப்படைகளுக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்திருந்தால் விபரங்கள் தரவும் :----.

21. நீர் குடியியல் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா ? :----.

22. நற்சாட்சிப்பத்திரங்கள் பற்றிய விவரங்கள் :

| பெயர் | பதவி | நிரந்தர முகவரி |
|---|---|---|
| | | |

23. **விண்ணப்பக்காரரால் கையொப்பமிட வேண்டிய வெளிப்படுத்துகை :**

மேலேயுள்ள வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விடைகள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என என் மீது ஆணையாக வெளிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிரந்தர வான்படையில் வான்படை வீரராக தெரிவுசெய்யப்படும் விண்ணபக்காரர்கள் தொடர்பில் கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கை முறையையும் அவற்றுக்குரிய விதிகளையும் நான் வாசித்து விளங்கிக்கொண்டுள்ளேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

6-164

---

## நீதிச்சேவை ஆணைக்குழு

வக்குப் நியாய சபைக்கான நியமனங்கள்

*1982 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப் பட்டவாறான 1956 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க முஸ்லிம் பள்ளி வாசல்கள், தர்ம, நம்பிக்கைப் பொறுப்புக்கள் அல்லது வக்குப் சட்டத்தின்கீழ் வக்குப் நியாய சபைக்கு நியமனம் செய்வதற்காக நீதிச்சேவை ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

2. விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளான முஸ்லிம்களாக இருத்தல் வேண்டும்.

3. கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய, விண்ணப்பங்கள் 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் என்னை வந்தடையுமாறு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வக்குப் நியாய சபை" எனக் குறிப்பிடல் வேண்டும். ஆவணங்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்பட லாகாது.

4. பின்வரும் ஆவணங்கள் எவற்றையேனும் அல்லது எல்லா வற்றையும் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுமிடத்து அவ்வாறு சமர்ப்பிக்கத் தயாராய் இருத்தல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) ஆகக்கூடிய கல்விச் சான்றிதழ் ;
(இ) உயர் தொழிற்றகைமைச் சான்றிதழ் ;
(ஈ) சிங்களத்தில்/தமிழில்/ஆங்கிலத்தில் சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சைச் சான்றிதழ்.

5. அரச/கூட்டுத்தாபன சேவையில் உள்ளவர்கள் அவர்களது விண்ணப்பங்களை தங்களது திணைக்கள/கூட்டுத்தாபனத் தலைவர் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

6. விண்ணப்பங்களும் அது தொடர்பான வேறேதேனும் கடிதத் தொடர்புகளும் நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு முகவரி யிடப்பட்ட வேண்டுமேயன்றி இந்த நிறுவனத்தின் வேறெந்த அலுவலருக்குமன்று.

சிசிர ரத்னாயக்க,
செயலாளர் (வேலை பார்க்கும்),
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
த. பெ. இல. 573,
கொழும்பு 12.
2013, மே 20.

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

**நீதிச்சேவை ஆணைக்குழு**

*வக்குப் நியாய சபைக்கு நியமனம் செய்வதல்*

1. முழுப்பெயர் :
2. முதலெழுத்துக்களுடன் பெயர் :
3. நிலையான வசிப்பிடம் :
4. அஞ்சல் முகவரி :
5. பிறந்த திகதி :
6. வயது :
7. தேசிய இனம் :
8. சமயம் :
9. தே. அ. அ. இல. :
10. தொலைபேசி இல. :
11. கல்வித் தகைமைகள் :

| | | |
|---|---|---|
| | | |

12. தொழில் தகைமைகள் :

| | | |
|---|---|---|
| | | |

13. விண்ணப்பதாரி எழுத, வாசிக்கத் தெரிந்த மொழிகள் :

14. விண்ணப்பதாரிக்கு முஸ்லிம் சட்டம் பற்றிய அறிவுண்டா ? :

15. விவாகமானவரா ? :

16. நீர் ஒரு சட்டத்தரணியா ? அவ்வாறாயின் இணைத்துக்கொள்ளப்பட்ட திகதி :

17. முன்னைய, தற்போதைய தொழில்கள் (திகதி விபரங்களுடன்) :

| முதல் | வரை | தொழில் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

18. விண்ணப்பதாரிக்குரிய சொத்துக்களின் பெறுமதி : ரூ.

19. மாதாந்த வருமானம் : ரூ.

20. கடன்கள் இருப்பின் தொகை விபரம் : ரூ.

21. சென்ற பத்து வருட காலப்பகுதியினுள் நீர் முனைப்பாக அரசியலில் ஈடுபட்டிருந்தீரா ? :

22. நீர் வருமானவரி செலுத்துமொருவரா ? :

23. உமக்கெதிராக நீதிமன்றமொன்றில் குற்றவியல் வழக்கேதேனும் உண்டா ? இருந்ததா ? :

24. நீதிமன்றங்களில் தண்டனை பெற்றிருப்பின் அதுபற்றிய விபரங்கள் :

25. உம்மைப் பற்றி நன்கறிந்துள்ள, உம்மைப் பற்றிய தனிப்பட்ட விபரங்கள் பெறக்கூடியவர்கள் :

| (1) | (2) |
|---|---|
| பெயர் : | பெயர் : |
| முகவரி : | முகவரி : |
| தொழில் : | தொழில் : |
| உம்மையறிந்துள்ள காலப்பகுதி : | உம்மையறிந்துள்ள காலப்பகுதி : |

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிமொழிகின்றேன்.

______________,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :—————.

**குறிப்பு**.- அனைத்து சான்றிதழ்களினதும் பிரதிகளை இத்தோடு இணைக்கவும்.

6-82

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு

மதிப்பீட்டுத் திணைக்களம்

### இலங்கை மதிப்பீட்டுச் சேவையின் வகுப்பு III தரம் II இற்கு உதவி மாவட்ட மதிப்பீட்டாளர் பதவி

மதிப்பீட்டுத் திணைக்களத்தின் இலங்கை மதிப்பீட்டுச் சேவை வகுப்பு III தரம் II இன் உதவி மாவட்ட மதிப்பீட்டாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு திறந்த போட்டிப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் 2013, யூன்/ யூலை மாதமளவில் கொழும்பில் நடாத்தப்படுவதோடு கீழ் குறிப்பிடப்படும் அறிவுறுத்தலுக்கேற்ப 2013.07.08 ஆந் திகதிக்கு தகுதியுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*2*. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பத்தின் 1 முதல் 7 வரையான விடயங்களை 1 ஆம் பக்கத்திலும் மற்ற விடயங்களை மற்ற பக்கத்திலும் உள்ளடக்கியுள்ள இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழியில் தமது கையெழுத்தால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் 2013.07.08 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெருமாறு "பிரதான மதிப்பீட்டாளர், "மதிப்பீட்டு நிலையம்", இல. 748, மருதானை வீதி, கொழும்பு 10" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். அத்தோடு பரீட்சையின் பெயர் விண்ணப்பத்தின் இடதுபக்க மேல் மூலையில் தமிழ், சிங்கள மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கிலத்தில் குறிப்பிடப்படவும் வேண்டும். விண்ணப்பத்தின் பிரதியொன்றை உம்மோடு வைத்திருப்பது பயனுடையதாகும்.

(ஆ) விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "உதவி மாவட்ட மதிப்பீட்டாளர் பதவிக்கான திறந்த போட்டிப் பரீட்சை" எனக் குறிப்பிடவும்.

(இ) விண்ணப்பம் நிரப்பப்படுவது தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலாக இருக்க வேண்டும். விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலுக்கு ஏற்ப ஆரம்ப தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் எழுத்து மூல பரீட்சைக்கு தோற்றுவர்.

(ஈ) மேற்கூறிய மாதிரிக்கு ஏற்ப முறைப்படுத்தப்படாத பூரணமற்ற அல்லது பட்டதாரி சான்றிதழின் பிரதி இணைக்கப்படாத விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் தபாலில் அனுப்பப்படாது அல்லது தாமதித்ததற்கான முறைப்பாடுகள் ஏற்கப்படாது. கடைசி தினம் வரை விண்ணப்பத்தை அனுப்ப தாமதித்த விண்ணப்பதாரிகள் அதற்கான பொறுப்பை அவர்களே ஏற்பர்.

*3*. **விண்ணப்பம் மற்றும் பரீட்சைக் கட்டணம்**.- (அ) ரூபா 700 பரீட்சைக் கட்டணமாக செலுத்தப்பட வேண்டும். விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன்னர் பரீட்சையில் ஆணையாளர் நாயகம், வருமான தலைப்புகு 2003-02-31 இல் பற்றுவைக்கும் விதத்தில் தீவின் ஏதேனுமொரு மாவட்ட/ பிரதேச செயலகத்தில் காசாக செலுத்தப்பட வேண்டும். பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை அதற்குரிய பகுதியில் கழராதவாறு ஒட்ட வேண்டும். இந்தக் கட்டணம் மீள வழங்கப்பட மாட்டாது. மேலும் பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதியை தங்களிடம் வைத்திருப்பது பிரயோசனமானதாக இருக்கும். நிழற்படம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் அல்லது பற்றுச்சீட்டு ஒட்டப்படாத விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

*4*. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- (அ) பிரதம மதிப்பீட்டாளரால் தயாரிக்கப்பட்ட அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரி களுக்கு பரீட்சை ஆணையாளரால் பரீட்சை அனுமதி அட்டை விநியோகிக்கப்படும். (ஒரு விண்ணப்பதாரி அனுமதி அட்டையைக் கொண்டிருக்காவிடில், அவ்வனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்வ தற்காக விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம், பதிவு தபால் செய்யப்பட்ட கடிதம் என்பவற்றின் பிரதிகளை இணைத்து இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு ஒரு வேண்டுகோள் கடிதமொன்றை அனுப்புவது ஏற்புடையதாகும்). அனைத்து பரீட்சார்த்திகளும் பரீட்சை நிலையத்தில் பரீட்சை மண்டப பொறுப்பாளரிடம் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறில்லாத எந்த பரீட்சார்த்தி யும் பரீட்சையில் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.

(ஆ) அனைத்து பரீட்சார்த்தியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்துமாறு கேட்கப்படுகின்றனர். அரச நிறுவனங்களூடாகப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது நிறுவனத் தலைவரின் மூலமும் ஏனையோர் அரசாங்க பாடசாலையின் அதிபர், ஓய்வு பெற்ற அதிபர், பிரதேசத்தின் கிராம சேவையாளர், சமாதான நீதவான், அனுமதியளிக்கப்பட்ட ஆணையாளர், பிரசித்த நொதாரிஸ், முப்படைகளினதும் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி, மாதாந்தம் ரூபா.240, 360 ஐ சம்பளமாகப் பெறும் நிரந்தர அரச சேவை அதிகாரி, பௌத்த விகாரையின் விகாராதிபதி, தலைமை தேரர், பிற மத ஸ்தாபனங்களின் தலைவர்கள் ஆகியோர் மூலமும் தமது கையொப் பத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

(இ) அனைத்து பரீட்சார்த்தியும் தமக்கு வழங்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் சமுகமளித்திருப்பதோடு தமது நுழைவுப் பத்திரத்தை மண்டபதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும். அனைத்துப் பரீட்சார்த்தியும் கடைபிடிக்க வேண்டிய பரீட்சை ஒழுங்குகள் இந்த வர்த்தமானி அறிவித்தலில் காணப்படுகின்றன.

(ஈ) பரீட்சை தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் பரிந்துரைக்கப்பட்ட சட்ட ஒழுங்குகளை விண்ணப்பதாரிகள் கடைபிடிப்பது அவசியமாகும். அச்சட்ட ஒழுங்குகளை மீறும் போது பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாகுவர். பரீட்சையில் தோற்றுவது, பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் முடிவே இறுதியானது.

*செயற்பாடு*.- பரீட்ச்சார்த்திக்கு பரீட்சை தொடர்பாக நுழைவுப் பரீட்சை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகுதியுடையவர் என்பதை ஆட்சேபனையின்றி ஏற்பதாகும்.

*5*. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- தாம் தோற்றும் அனைத்துப் பாடங்கள் தொடர்பாக பரீட்சை மண்டப பொறுப்பாளர் திருப்தி கொள்ளும் பொருட்டு பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். இது தொடர்பாக கீழ்வரும் விடயங்கள் கருத்திற்கொள்ளப்படும் :-

(1) தனியாள் ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(2) செல்லுபடியான கடவுச்சீட்டு.

***பிழையான தகவல் வழங்குதல்***.- இந்தப் பரீட்சைக்கு தோற்றுவ தற்காக எந்த பரீட்ச்சார்த்திக்காவது தகுதியில்லை என தென்பட்டால்

பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் எச்சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகத்துவத்தை செல்லுபடியற்றதாக்க இடமுண்டு. சேவையில் இணைந்து கொண்டதன் பிற்பாடு பரீட்சார்த்தியால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களில் பிழையான தகவல்களை தெரிந்தும் அதனை சமர்ப்பித்து பரீட்சையில் தோற்றி யிருந்தால் அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

**7. சேவையில் ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான நிபந்தனையும் சேவைக்கான நியதிகளும் :**

(i) இந்த பதவி நிரந்தரமானது ஓய்வூதியம் பெறத்தக்கதுமாகும். விதவைகள், தபுதாரன், அநாதைகளுக்கான ஓய்வூதிய சம்பளத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்ய வேண்டும். நியமனம் 3 வருட பயிற்சிக் காலத்தைக் கொண்டதாகும்.

(ii) அரச நிர்வாக சுற்றறிக்கை இல. 07/2007 ற்கு இணங்க, இலங்கை மதிப்பீட்டாளர் சேவையின் வகுப்பு III தரம் II இற்கு நியமிக்கப்படும் அதிகாரி நியமனத் தினத்திலிருந்து 5 வருட காலப்பகுதிக்குள் தாம் சேவையில் இணைந்து கொண்ட மொழி மூலம் மற்றும் மேலதிகமாக இன்னாரு மொழியில் தேர்ச்சி பெற வேண்டும். ஆங்கில மொழியில் சேவையில் இணைந்த அதிகாரி அரச மொழியொன்றில் தேர்ச்சி பெறுவது நியமனம் நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்னர் இன்னொரு மொழியில் நியமனத் திகதியிலிருந்து 5 வருட காலப்பகுதிக்குள் தேர்ச்சி பெற வேண்டும். மொழித் தேர்ச்சியை பெறாத அதிகாரிகளின் சம்பள அதிகரிப்பு தகைமை பெறும் வரை இடைநிறுத்தி வைக்கப்படும்.

8. **சம்பளமும் கொடுப்பனவும்**.- 24.08.2007 ஆந் திகதியிடப்பட்ட அரச நிர்வாக சுற்றிக்கை இல.06/2006(iv) இன் இல.MN-5-2006A ற்கு இணங்க சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) (ரூபா 16,720 - 10 X 320 - 11 X 365 - 15 X 450 - 30,685) இந்த பதவிக்கு உரித்தானதாகும். சம்பள பதவியுயர்வு கொடுப்பனவு வினைதிறன் தடைப்பரீட்சையில் சித்தியடைவதை அடிப்படையாகக் கொண்டும் வழங்கப்படும்.

9. **மொழி**.- இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இடம் பெறும்.

(அ) பரீட்சார்த்தி பரீட்சைக்கு தோற்றுவது தகைமை பெற்ற பரீட்சையில் சித்தியடைந்த மொழியில் அல்லது அரச மொழிகளில் ஒன்றிலாக இருக்க வேண்டும்.

(ஆ) பரீட்சார்த்தி பரீட்சையில் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்.

(இ) பரீட்சையின் போது மொழி மாற்றத்திற்கு அனுமதி வழங்கப் படாது.

10. **பரீட்சை முறை**.- 2 வினாத்தாள்களைக் கொண்ட எழுத்து மூலப்பரீட்சையாகும்.

**பாடக்குறிப்பு**.- I ஆம் வினாத்தாள்.- இந்த வினாத்தாள் 25ஐ விட அதிகரிக்காத சொத்து பராமரிப்பு மற்றும் மதிப்பீட்டுக் கலை தொடர்பான விஞ்ஞானத் துறையில் பட்டம் பெறுவதற்காகக் கற்கும் பாடங்களுக்கமைய பல்தேர்வு வினாத்தாளாகும்.

காலம் : 30 விநாடிகள்

சித்தியடைவதற்கான குறைந்தபட்சப் புள்ளி 50% ஆகும்.

II ஆம் வினாத்தாள்.- சாதாரணமாக இந்த வினாத்தாள் சொத்துக்கள் பராமரிப்பு மற்றும் மதிப்பீட்டுக் கலை தொடர்பான விஞ்ஞானத் துறையில் பட்டம் பெறுவதற்காகக் கற்கும் பாடவிதானங் களுக்கமைவான விடயங்களாகும்.

காலம் : 1 மணித்தியாலம்

சித்தியடைவதற்கான குறைந்தபட்சப் புள்ளி 50% ஆகும்.

11. **அவசியமான தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல்.

(ii) நன்னடத்தையுள்ள சிறந்த கண் பார்வையுள்ள உடல் ஆரோக்கிமுள்ளவராக இருத்தல்.

(iii) 2013-07-08 ற்கு 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல். (நிறுவனத்தின் சட்ட ஒழுங்குகளுக்கு அமைய இப்போதும் சேவையில் இருப்போருக்கு கூடிய வயதெல்லை கிடையாது) மற்றும்

(iv) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சொத்து பராமரிப்பு மதிப்பீட்டுக் கலை தொடர்பாக விஞ்ஞான பட்டதாரியாக இருத்தல்.

12. **ஆட்சேர்ப்பு முறை**.- அறிவித்தலில் காணப்படும் தகைமைகளை பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சை ஆணையாளரால் நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் பெறுபேறுக்கு அமைய தெரிவு இடம் பெறும். தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளின் ஆரம்ப தகைமையை பரிசோதிக்க பிரதம மதிப்பீட்டாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

(i) ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும்.

(ii) திறந்த போட்டிப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் பெருபேறுகளுக்கு அமைய வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

(iii) வெற்றிடங்களில் ஒரு பகுதியை நிரப்புவது அல்லது முழுதையும் நிரப்பாது விடும் அதிகாரம் பிரதான மதிப்பீட் டாளருக்கு உண்டு.

(iv) பரீட்சை நடைபெற முன், நடைபெறும் போது அல்லது நடைபெற்றதன் பிற்பாடு எச்சந்தர்ப்பத்திலாயினும் யாராவது விண்ணப்பதாரி இந்த பதவிக்கு தகுதியற்றவர் என உறுதிப்படுத்தப்பட்டால் எச்சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகர்துவம் செல்லுபடியற்றதாக்கப்படும். மேலும், விண்ணப்பதாரியால் அறிந்தும் பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டிருப்பின் அவர் நியமனம் பெற்றதன் பிற்பாடு உறுதிப்படுத்தப்பட்டால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

(v) ஏதாவது பரீட்சையை காலம் தாழ்த்துவது அல்லது நிராகரிப்பதற்கான அதிகாரம் பிரதான மதிப்பீட்டாளருக்கு உண்டு.

13. தகவல் வழங்கும் போது விண்ணப்பதாரி கீழ்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ்

(ii) பட்டதாரிச் சான்றிதழ்

(iii) கல்வி அல்லது தொழிற் சான்றிதழ்கள்

(iv) நற்சான்றிதழ் இரண்டு, அதில் ஒன்று கல்விப் பணிப்பாளர் அல்லது பல்கலைக்கழக கலாநிதி அல்லது பேராசிரியர் ஒருவரிடமிருந்து பெறப்பட்டதாக இருக்க வேண்டும்.

(v) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சித்தியடைந்த உயர் பரீட்சையின் சான்றிதழ்.

**குறிப்பு** :

- கோரப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்காத பரீட்சார்த்தியின் விண்ணப்பம் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

பிரதம மதிப்பீட்டாளர்.

மதிப்பீட்டாளர் திணைக்களம்,
2013.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை மதிப்பீட்டுச் சேவையின் வகுப்பு III தரம் II இற்கு உதவி மாவட்ட மதிப்பீட்டாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2013**

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும் )

1. விண்ணப்பதாரியின் பெயர் :

1.1 முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில தடித்த எழுத்தில்) உ+ம்: Mr./ Mrs./Miss: Silva A.B. :----.

1.2 முழுப் பெயர் (ஆங்கில தடித்த எழுத்தில்) :----.

1.3 முழுப் பெயர் (சிங்களம்/ தமிழில்) :----.

2. தனிப்பட்ட முகவரி (சிங்களம்/ தமிழில்) :----.
(முகவரி மாற்றப்பட்டால் அது பற்றி உடனே அறியத்தரவும்.)
அனுமதி அட்டை அனுப்பப்படவேண்டிய முகவரி :----.

3. ஆண்/ பெண் :

| | |
|---|---|
| பெண் | |
| ஆண் | |

(பொருத்தமான கூட்டில் x அடையாளமிடுக)

4. திருமணமானவர்/ திருமணமாகாதவர்-
(திருமணமாகாதவர்-1,
திருமணமானவர்-2)
(பொருத்தமான இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

5. சாதி :
சிங்களவர் - 1
தமிழர் - 2
இந்திய தமிழர் - 3
முஸ்லிம் - 4
வேறு - 5
(பொருத்தமான இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

6. தேசிய அடையாள அட்டை இல :

7. பிறந்த திகதி :

ஆண்டு மாதம் தினம்

2013.07.08 ஆந் திகதிக்கு வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

7. பிறந்த திகதி :

8. நீர் இலங்கை பிரஜையாவின் வம்சாவளியிலா அல்லது பதிவிலா? குடியுரிமையைக் குறிப்பிடவும். (பதவினாலாயின் விபரத்தைக் குறிப்பிடவும்)………….

9. கீழ்வரும் விடயங்களில் சித்தியடைந்த அதியுயர் பரீட்சை :

1. சிங்களம்: …………………………
2. தமிழ்: ……………………………..
3. ஆங்கிலம்:…………………………..

10. கல்வி/ தொழில் தகமைகள்:

| பரீட்சை/பட்டம் | செயற்படும் திகதி | பல்கலைக் கழகம்/ நிறுவனம் | வருடாந்த சம்பளம் |
|---|---|---|---|
| | | | |

11. தற்போதைய தொழிலும் முன்னர் செய்த தொழில் சம்பந்தமான விபரம் (இருப்பின்) :

| திணைக்களம் / நிறுவனம் | பதவி | காலம் | | வருடாந்த சம்பளம் |
|---|---|---|---|---|
| | | இருந்து | வரை | |
| | | | | |

12. நீர் அரச உத்தியோகத்திலிருந்து விலகியவரா? :----.
(அவ்வாறாயின் விபரத்தைக் குறிப்பிடவும்) -------------------

13. உமக்கு எதிராக (நீர் தற்போது சேவையில் இருப்பினும்) திணைக்கள முறைப்பாடுகள் ஏதும் உள்ளதா? :----.

14. நீர் ஏதாவது குற்றச்சாட்டில் நீதிமன்றால் குற்றவாளியாகக் காணப்பட்டவரா? அவ்வாறாயின் விபரத்தைக் குறிப்பிடவும் : ----.

15. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் காரியாலயம் :----.
காசுக் கட்டளை இல. :----.
திகதி :----.

(காசுக் கட்டளையை கழராதவாறு கீழே ஒட்டி அனுப்பவும்)

| |
|---|
| |

16. **விண்ணப்பதாரியின் உறுதிமொழி :**

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்ட அனைத்து தகவல்களும் உண்மையானவை என்றும் சரியானவையென்றும் உறுதிமொழிகிறேன். அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவலில் ஏதாவது பிழையாக அல்லது பொய்யாக இருப்பின் நான் தெரிவு செய்யப்பட முன் அறியக்கிடைத்தால் நான் தகைமையற்றவர் என்றும், தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் அறியக்கிடைத்தால் எனக்கு எவ்வித நட்டஈடும் வழங்கப்படாது நான் சேவையிலிருந்து நீக்கப்படலாம் என்றும் அறிந்துள்ளேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

17. **திணைக்கள தலைவர்/நிறுவனத்தின் தலைவரின் சான்றிதழ்:**

(அரச சேவை/மாகாண அரச சேவையில் இருக்கும் விண்ணப்ப தாரிகளுக்கு மட்டும்)

இந்த நிறுவனத்தின் ................................பதவியில் இருக்கும் திரு./திருமதி/செல்வி .................................. ஆகியவரின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கிறேன். அவரது வேலையும் நடத்தையும் திருப்திகரமானதென்றும் அவர் மீது எவ்வித முறைப்பாடுகள் இல்லையென்றும் சான்று பகர்கிறேன்.

அவர் இந்த பதவிக்காக தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார் அல்லது விடுவிக்கப்படமாட்டார்.

----,
திணைக்கள/நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டவரின் கையொப்பம்.

பதவி முத்திரை..........................

திகதி :----.

6-136

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்**. தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை-2013***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூன்** | .. | வெள்ளி | 07.06.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 23.05.2013 |
| | | வெள்ளி | 14.06.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.05.2013 |
| | | வெள்ளி | 21.06.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.06.2013 |
| | | வெள்ளி | 28.06.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.06.2013 |
| **யூலை** | .. | வெள்ளி | 05.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.06.2012 |
| | | வெள்ளி | 12.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.06.2012 |
| | | வெள்ளி | 19.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.07.2013 |
| | | வெள்ளி | 26.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.07.2013 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 02.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.07.2013 |
| | | வியாழன் | 08.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.07.2013 |
| | | வெள்ளி | 16.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.08.2013 |
| | | வெள்ளி | 23.08.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 08.08.2013 |
| | | வெள்ளி | 30.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.08.2013 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.